258, எம் வின்சென்ட் பெரேரா
மாவத்தை
கொழும்பு 14
0114700800

# யூனிலீவரின் சர்வதேச கைச்சுகாதார வர்த்தகநாமமான லைஃப்போய் கின்னஸ் உலக சாதனையை முறியடித்துள்ளது

*'யூடியுப் தளத்தில் கைச் சுகாதார பற்றி அறிந்து கொள்வதில் வீடியோவை பார்த்துள்ள அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்கள்' என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது*

**கொழும்பு, நவம்பர் 02, 2021:** உலகின் முதல் தர சுகாதார சவர்க்கார வர்த்தகநாமமான லைஃப்போய்,[1] அண்மையில் சர்வதேச கைகளைக் கழுவும் தினத்தில் 'யூடியுப் தளத்தில் கைச் சுகாதாரம் பற்றி அறிந்து கொள்வதில் வீடியோவை பார்த்துள்ள அதிக எண்ணிக்கையிலான பார்வையாளர்கள்' என்ற கின்னஸ் உலக சாதனையை முறியடித்துள்ளது. உலகளாவிய மெய்நிகர் வகுப்பறையின் மூலம் கற்பிக்கப்படும் இப்பாடம், இலங்கை மற்றும் உலகம் முழுவதும் உள்ள ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சிறுவர்களுக்கு சவர்க்காரத்தினால் கைகளைக் கழுவுதல் பற்றிய முக்கியமான செய்தியை எடுத்துக் கூறுகின்றது. ஏற்கனவே 3.5 மில்லியனுக்கும் அதிகமான இலங்கை மக்களுக்கு கை கழுவும் பழக்கத்தை மேம்படுத்தவும், அவர்களின் சுகாதாரத்தை மேம்படுத்தவும், தடுக்கக்கூடிய நோய்களில் இருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ளவும் உதவியுள்ள லைஃப்போய், டிஜிட்டல் நடத்தை மாற்றத்தை முன்னெடுப்பதை இலக்காகக் கொண்டு, சுகாதாரத்தை மையமாகக் கொண்ட ஆங்கில அகர வரிசை எழுத்துக்களுடன் இடைச்செயற்பாடுகள் மிக்க வழியில் தொடர் விளையாட்டுக்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

2020 ஆம் ஆண்டில், சிறுவர்கள் தங்கள் ஆங்கில வரிசை A, B, C க்களை எவ்வாறு ஊக்கத்துடன் கற்றுக்கொள்கிறார்கள் என்பதைக் கண்டு, அதன் மூலம் ஈர்க்கப்பட்டுஇ லைஃப்போய் H என்ற எழுத்தை கற்பிக்கும் விதத்தை புதுமையான வழியில் உட்புகுத்தும் இலக்கினை முன்னெடுத்திருந்தது. இந்த வர்த்தகநாமமானது, ஆங்கிலத்தில் H என்றால் hat, horse மற்றும் hippo… என சிறுவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் பாணியை H என்றால் கட்டாயமாக Handwashing (கைகளைக் கழுவுதல்) என்பதையும் குறிக்கின்றது என்றது ஒரு எளிமையான செய்தியை எடுத்துச் செல்லும் வகையில் "H for Handwashing" என்ற பல ஆண்டு கால ஊக்குவிப்புச் பிரச்சாரத்தை ஆரம்பித்திருந்தது.

மெய்நிகர் வகுப்பறையானது சிஎன்என் அலைவரிசை நிகழ்ச்சித் தொகுப்பாளரும், ஒளிபரப்பு ஊடகவியலாளருமான ரிகோ ஹிசான், கல்விமானும் மற்றும் ஆரம்ப சிறு பராய கற்றல் தொடர்பில் 14 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள ரொபேர்ட்டா கொலிங்கோஃப், விருதுகளை வென்றுள்ள நடிகையும், சர்வதேச கைகளைக் கழுவும் ஊக்குவிப்பாளருமான காஜல் தேவ்கன், இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான றோட்டரிக் கழகம் மாவட்டம் 3220 இன் அங்கத்தவர்கள் உள்ளிட்ட நிபுணர் குழு மற்றும் உலகெங்கிலும் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் மற்றும் சிறுவர்கள் பங்குபற்றியவாறு இடம்பெற்றது.

H is for Handwashing என்ற அறிவை சிறுவர்கள் மத்தியில் வளர்ப்பதற்காக, Sesame Workshop இன் அபிமானம் பெற்ற கைப்பொம்மைகளான Elmo, Raya, Cookie Monster, மற்றும் Grover ஆகிய பாத்திரங்கள் நடித்துள்ள வர்த்தகநாமத்தின் முதல் டிஜிட்டல் நடத்தை மாற்ற விளையாட்டுக்களை அறிமுகம் செய்யும் நிகழ்வில், Sesame Workshop உடனான தனது கூட்டாண்மை தொடர்பிலும் லைஃப்போய் அறிவித்துள்ளது.

வகுப்பறை நிகழ்வில் லைஃப்போய் இன் முதலாவது சிறுவர்களுக்கான புத்தகமான - "H for Handwashing" என்ற ஆங்கில அகர வரிசை எழுத்துக்கள் புத்தகம் வெளியீடு செய்து வைக்கப்பட்டுள்ளதுடன், இதில் சிறுவர்கள் Azzy (A முதல் Z வரை) குதிரையுடன் எழுத்துக்களை ஆராய்ந்து அறிவை வளர்க்கலாம். இப்புத்தகம் எப்போதும், எங்கும் சிறுவர்களுக்கு ABC ஆங்கில அகர வரிசை கற்பிக்கப்படும் போது, பாடசாலை பாடவிதானங்களுக்கு உதவும் நோக்கம் கொண்டது. (https://hforhandwashing.lk/alphabet-book/)

---

[1] இக்கணிப்பீடு சரும பராமரிப்பு தயாரிப்புப் பிரிவில் NielsenIQ விற்பனை அளவுகளின் (கிடைக்கப்பெறும் பிந்திய 12 மாதங்களுக்கான) அடிப்படையிலானது. © 2021, NielsenIQ.

இலங்கையில், பிரபலங்களான பாத்திய ஜெயக்கொடி, சந்துஷ் வீரமன் மற்றும் சச்சினி அயேந்திரா மற்றும் வர்த்தக பங்காளர்களான கீல்ஸ் மற்றும் க்ளோமார்க் ஆகியோருடன் கூட்டுசேர்வதன் மூலம் பிரதான ஊடகங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் வர்த்தக மைய ஊக்குவிப்பு செயல்பாடுகள் மூலம் லைஃப்போய் வகுப்பறை நிகழ்வுக்கு தனது ஆதரவை வழங்கியுள்ளது. கொழும்பில் 8 இடங்களில் 39 கைகளைக் கழுவும் மையங்களை நிறுவுவதற்கு முன்பள்ளிகளுடன் கூட்டாக இணைந்து செயற்பட்டு, 1,500 குழந்தைகளுக்கு பயன்தரும் வகையில் இதனை ஏற்பாடு செய்ததன் மூலம் வர்த்தகநாமம் இந்த நிகழ்வு குறித்து தனது செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

**யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தின் அழகு மற்றும் தனிப்பட்ட பராமரிப்பு மற்றும் நிறுவன தொடர்பாடல்களுக்கான தலைமை அதிகாரியான நிலுஷி ஜயதிலக** அவர்கள் கூறுகையில், *''லைஃப்போயின் கைச் சுகாதாரத் திட்டத்தின் மூலம் உள்நாட்டு சமூகங்களுக்கு கைச் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில், ஒரு தசாப்தத்திற்கும் மேலாக இலங்கையில் கை கழுவுவதை ஊக்குவிப்பதில் லைஃப்போய் முன்னணியில் செயற்பட்டு வந்துள்ளது. பல தலைமுறைகளாக சிறுவர்கள் மத்தியில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்த, பாடசாலைகளுடன் நீண்டகால நடத்தை மாற்ற திட்டத்தை ஏற்பாடு செய்து வந்துள்ளதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். சிறுவர்களுக்கு சிறந்த கைச் சுகாதாரப் பழக்கங்களை அறிமுகப்படுத்துவதற்கான புதிய வழிமுறைகளை நாங்கள் ஆராயும் வேளையில், இலங்கையில் இந்த இயக்கத்தை ஆரம்பித்து வெற்றிகரமான ஒரு வருடத்திற்குப் பிறகு, எமது H for Handwashing ஊக்குவிப்புப் பிரச்சாரத்தை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்களின் முதன்முதல் உலகளாவிய மெய்நிகர் வகுப்பறையின் மூலம், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சிறுவர்களுக்கு புத்துணர்ச்சி அளிப்பதன் ஊடாக, சரியான தருணங்களில் சவர்க்காரத்தினால் கைகளைக் கழுவுவதன் முக்கியத்துவத்தை, சிறுவர்கள் கைகழுவுவதை ஒரு வீட்டு வேலை என்ற பரிமாணத்திலிருந்து தினமொன்றின் வேடிக்கையான தருணங்கள் என்ற போர்வைக்கு எம்மால் மாற்ற முடியும் என்று நம்புகிறோம்,''* என்று குறிப்பிட்டார்.

2007 ஆம் ஆண்டு முதல், சவர்க்காரத்தால் கைகளைக் கழுவுவதன் மூலம் நோயைத் தடுக்கும் மற்றும் உயிர்களைக் காப்பாற்றும் இலக்குடன் லைஃப்போய் செயற்பட்டு வந்துள்ளது. சிறந்த கைச் சுகாதார நடைமுறைகளை ஊக்குவிப்பதற்கும், சரியான வழிமுறையில் கைகளைக் கழுவுவதில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தை சிறுவர்களுக்கு கற்பிப்பதற்கும், லைஃப்போய் பாடசாலைகள் மத்தியில் கைகளைக் கழுவும் மையங்களை நிறுவ கல்வி அமைச்சுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. பாடசாலைகளில் சுகாதார வசதிகள் மற்றும் நீர் குழாய் அமைப்புகளை மேம்படுத்துவதற்கும் சமூகத்தை தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகளை ஒழுங்கமைப்பதற்கும் சுகாதார அமைச்சுடன் இணைந்து இந்த வர்த்தகநாமம் பணியாற்றி வந்துள்ளது. அதன் 'H for Handwashing' ஊக்குவிப்பு பிரச்சாரத்தை ஆரம்பித்ததில் இருந்து, 3.6 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களை இந்த வர்த்தகநாமம் எட்டியுள்ளதுடன், கல்வியின் ஆரம்ப கட்டத்திலேயே அடிப்படை பழக்கவழக்கங்கள் சிறுவர்களுக்கு கற்பிக்கப்படுவதை உறுதிசெய்ய கல்வியாளர்களுடன் கைகோர்த்துள்ளது.

2020 ஆம் ஆண்டில், இலங்கையர்களை வைரஸிலிருந்து பாதுகாக்க உதவுவதில் தொற்றுநோய் பரவுவதைத் தடுப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சவாலை இவ்வர்த்தகநாமம் கையில் எடுத்துக் கொண்டது. எனவே, லைஃப்போய் அரச நிறுவனங்களுடன் கூட்டுச் சேர்ந்து, பாடசாலைகள் மற்றும் பொது இடங்களில் 100 க்கும் மேற்பட்ட கை கழுவும் மையங்களை அமைத்து சமூகங்களுக்கு பயனளித்து, அவர்களை சரியான வழிமுறையில் கைகளைக் கழுவும் பழக்கங்களில் ஈடுபட ஊக்குவித்துள்ளது. பாடசாலை மாணவர்களிடையே சிறந்த கை கழுவும் பழக்கத்தை மேம்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணி மற்றும் கல்வி அமைச்சுடன் ஒத்துழைத்ததுடன், சரியான கைச் சுகாதாரத்தின் மூலம் பாதுகாப்பு, தடுப்பு மற்றும் ஆரோக்கியத்தை கொண்டு வரும் சமூகப் பணியில் சிறுவர்கள் மற்றும் பொதுமக்களை ஈடுபடுத்தும் வகையில் பல தகவல்தொடர்பாடல் ஊக்குவிப்புப் பிரச்சாரங்களையும் ஆரம்பித்துள்ளது.